# 3 ஏமாந்த நாய்

ஓர் ஊரில் ஒரு ஓட்டல் இருந்தது. ஓட்டலின் பின்புறத்தில் சமையல்காரன் வடை சுட்டுக் கொண்டிருந்தான். காக்கா ஒன்று சன்னலில் காத்திருந்தது. சமையல்காரன் விறகு எடுப்பதற்காக கீழே குனிந்தான். காக்கா வடை ஒன்றைக் கொத்திக்கொண்டு பறந்தது.



அவ்வேளை ஓட்டல் முதலாளியும் வந்தார். சமையலாளனை ஏசினார். எவனாவது பையன் திருடியிருந்தால் அவர் பிடித்து அடித்திருப்பார். காக்காவை அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை.



காக்கா ஒரு வேப்பமரத்துக் கிளையில் உட்கார்ந்து, மற்றக் காகங்களையும் அழைத்து விருந்து போட எண்ணியது.

அதற்கிடையில் நாய் ஒன்று ஓடிவந்து காக்கைக்குக் கீழே உட்கார்ந்தது. அண்ணாந்து மேலே பார்த்தது. நாவை நீட்டியது.

அதிலிருந்து நீர் சொட்டியது. காக்காவை ஏமாற்றி வடையைப் பறிக்க எண்ணியது.

''காக்கா, காக்கா, நீ அழகான காக்கா. குயில் குஞ்சைக் கூட நீ தான் அடைகாத்து குரல் சொல்லிக் கொடுப்பாயாம். ஒரு பாட்டுப் பாடுவாயா? கேட்க ஆவலாயிருக்கு.'' நாய் நயமாகக் கேட்டது.

காக்கா உடனே வடையைக் கால் நகங்களிடையே வைத்துப் பிடித்துக் கொண்டது.

''என் பாட்டி ஒருத்தி நரியிடம் ஏமாந்த கதையை நானும் கேட்டிருக்கிறேன். அதே போல தொடர்ந்து எங்களையெல்லாம் ஏமாற்றி விடலாம் என்று எண்ணிவிடாதே. நான் பாடத்தான் போகிறேன். உனக்காக அல்ல. என் இனத்தவர் எல்லோரையும் அழைப்பதற்காக. நாங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து இந்த வடையை பகிர்ந்து சாப்பிடுவோம். உன்னைப் போல உன் இனத்தவரையே வெறுக்கிற சாதியல்ல நாங்கள். இந்த வடை உனக்குக் கிடைத்தால் நீயே சாப்பிட்டுவிடுவாய். இன்னொரு நாய் வந்தால் இந்த வடையை விட்டுவிட்டு உன் சகோதரனையே கடிப்பாய். உன்னைப் பார்க்கவே வெட்கமாயிருக்கு. ஓடிவிடு''

காக்கா சொல்லிக்கொண்டே எச்சமிட்டது. அது நாயின்மேல் விழுந்தது.

'கா...கா...கா..' என்று காக்கா கத்தியது.

பல காக்கைகள் எல்லாத் திசைகளிலிருந்தும் பறந்து வந்தன.

ஏமாந்த நாய் தலை குனிந்தபடி ஓடியது.

**செ. கணேசலிங்கன்**

◆ அரும்பதங்கள்

| | |
|---|---|
| அழைத்தல் | - கூப்பிடுதல் |
| எண்ணியது | - நினைத்தது |
| ஆவலாயிருக்கு | - ஆசையாயிருக்கு |
| எச்சம் | - பறவைகளின் மலம் |

## கிரகித்தல் பயிற்சி

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. காகம் வடையைக் கொத்திச் சென்ற சந்தர்ப்பத்தைக் கூறுக.
2. வேப்பமரத்தில் அமர்ந்த காகத்தின் யோசனை யாது?
3. நாயின் வாயிலிருந்து நீர் சொட்டியதற்கான காரணம் யாது?
4. நாயின் திட்டம் என்ன?
5. காக்கையிடம் காணப்பட்ட நல்ல பழக்கம் ஒன்றையும் தீய பழக்கம் ஒன்றையும் கூறுக.
6. இறுதியில் நாய்க்கு என்ன நடந்தது?

## மொழி விருத்திச் செயற்பாடுகள்

1. ஏமாந்த நாய் எனும் இக்கதையை வகுப்பறையில் தெளிவாகக் கூறுவதற்கு வழிப்படுத்துக.
2. கதையினைத் தொனி பேதங்களுடன் வாசிக்க வழிப்படுத்துக.
3. ஏனைய மாணவர்கள் கதையை அவதானமாகக் கேட்க வழிப் படுத்துக.
4. காக்கை தான் அறிந்ததாகக் கூறப்படும் கதையினை வகுப்பறையில் மாணவர்கள் கூறுவதற்கான செயற்பாட்டை முன்னெடுக்குக.
5. இது போன்ற கதைகளை மாணவர்கள் வாசித்துக் கூறுவதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்குதல் அவசியமாகும்.

# எழுத்துக்களின் வகை தொகையை அறிதல்

| உயிர் எழுத்துக்கள் | மெய்யெழுத்துக்கள் | உயிர்மெய் எழுத்துக்கள் |
|---|---|---|
| (பன்னிரண்டு) | (பதினெட்டு) | (இருநூற்றுபதினாறு) |
| *12* | *18* | *216* |

| | | |
|---|---|---|
| உயிர் எழுத்துக்கள் | - | *12* |
| மெய் எழுத்துக்கள் | - | *18* |
| உயிர்மெய் எழுத்துக்கள் | - | *216* |
| ஆய்த எழுத்து | - | *1* |
| மொத்தம் | = | *247* |

## உயிர் எழுத்துக்கள்

அ, ஆ. இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ ஆகிய பன்னிரண்டு எழுத்துக்களும் உயிர் எழுத்து எனப்படும். இவற்றை இரண்டாக பிரிக்கலாம்.

1. குறில் - அ, இ, உ, எ, ஒ
2. நெடில் - ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ

## மெய் எழுத்துக்கள்

இதனை மூன்றாகப் பிரிக்கலாம்.

1. வல்லின மெய் - க், ச், ட், த், ப், ற்
2. மெல்லின மெய் - ங், ஞ், ண், ந், ம், ன்
3. இடையின மெய் - ய், ர், ல், வ், ழ், ள்

## உயிர்மெய் எழுத்துக்கள்

உயிர் எழுத்தும் மெய் எழுத்தும் இணைந்து உருவாக்கப்படும் எழுத்துக்கள் உயிர்மெய் எழுத்துக்கள் எனப்படும். அவ்வாறு உருவாகும் எழுத்துக்களின் எண்ணிக்கை 216 ஆகும்.

உதாரணம்

| | | | | |
|---|---|---|---|---|
| க் | + | அ | = | க |
| க் | + | ஆ | = | கா |
| க் | + | இ | = | கி |
| க் | + | ஈ | = | கீ |
| ட் | + | உ | = | டு |
| ல் | + | ஓ | = | லோ |
| ந் | + | அ | = | ந |

இவ்வாறு 18 மெய்களும் 12 உயிருடன் சேர்ந்து உயிர்மெய் எழுத்துக்கள் உருவாகும்.

## ஆய்த எழுத்து - ஃ